DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 69/2023

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.அழகுலட்சுமி | Caste: | |
| Father's Name | : மணிகண்டன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

25.05.2026 – 12.30 PM

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து மீன் வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் உடையார் கூட்டம் ஆகும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை 07.30 மணிக்கு நானும் எனது கணவர் மணிகண்டன் எங்கள் வீட்டில் இருந்த போது வீட்டிற்கு வெளியே கூட்டமாக 10 க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கூட்டத்திற்கு சென்று பார்த்த போது எங்களை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள்.

2. அதனால் எனது உறவினர்களுடன் சேர்ந்து என்னை கமுதி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்து அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக மதுரை அரசுமருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டேன். எனது கணவர் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டார். நான் மேற்படி அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு

செய்யப்படுகிறது.  போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. கடந்த 11.05.2022 ம் தேதி காலை 08.00 மணியளவில்  ஆஜர் 1 ம் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து என்னையும் எனது கணவரையும்  ஆபாசமாக பேசி கொலைமிரட்டல் விடுத்து சென்றதாகவும் பின்னர் எனது கணவர் அந்த மன அழுத்தத்தில்  சாணி பவுடர் குடித்ததால் நான்  பயந்து கொண்டு எனக்கும் மன கஷ்டமாக இருந்ததால் 12.05.2022 ம் தேதி காலை 07.30 மணியளவில் பூச்சிச்கொல்லி மருந்தை குடித்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக புகார்  வாக்குமூலத்திலும்  போலீசார் விசாரித்தபோதும் சொல்லிவிட்டு தற்போது  எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு வழக்கிலிருந்து எதிரிகளைக் காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:45:16 +0530